**2022.02.08**
பெயர்:

வணக்கத்துக்குரிய மதகுருமார்
திரு./ திருமதி/ செல்வி

**47 ஆம் பட்டமளிப்பு விழா 2021 - (2022 பெப்ரவரி மாதம் 26, 27, மற்றும் 28)**

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் **47** ஆம் பட்டமளிப்பு விழா **2022** பெப்ரவரி மாதம் **26, 27** மற்றும் **28** ஆம் திகதிகளில் கொழும்பு **07,** பௌத்தாலோக்க மாவத்தையில் அமைந்துள்ள பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற உள்ளது.
இந்த பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்ள உங்களால் அனுப்பப்பட்ட விண்ணப்பப் படிவம் மற்றும் ஏனைய ஆவணங்களின்படி நீங்கள் இப் பட்டமளிப்பு விழாவில் பட்டங்கள் பெற தகுதி அடைந்துள்ளீர்கள்.

நாட்டில் இப்பொழுது நிலவும் **Covid-19** தொற்று நோயை கட்டுப் படுத்தும் முகமாக விதிக்கப்பட்டுள்ள சுகாதார சட்டதிட்டங்களுக்கு ஏற்ப பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் பிரதான கூடத்தில் கூடக்கூடிய நபர்கள் அளவை கட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் இப் பட்டமளிப்பு விழாவை **10** அமர்வுகள் கொண்டு நாடாத்தப்படவுள்ளது.

உங்களுக்கான அமர்வு கீழே உள்ளவாறாகும்.

**ஒன்பதாம் அமர்வு - 2022 பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி மு. ப. 10 .30 - பி. ப. 01 .00 வரை பட்டபின் படிப்பு கல்வி பீடத்தில் கலாநிதி, முதுதத்துவமாணி, முதுகலைமாணி, உணவு மற்றும் தொழில்நுட்பம் பற்றிய முதுவிஞ்ஞானமாணி மற்றும் முகாமைத்துவ முதுவிஞ்ஞானமாணி ஆகிய பட்டபின் படிப்பு பட்டங்கள் பெரும் எல்லா பட்டதாரிகளுக்கும்.**

**பத்தாம் அமர்வு - 2022 பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி பி. ப. 02 - பி. ப. 04.30 வரை பட்டபின் படிப்பு கல்வி பீடத்தில் தொழில்நுட்பக் கணிதம் பற்றிய முதுவிஞ்ஞானமாணி, கைத்தொழில் பகுப்பாய்வு இரசாயனவியல் பற்றிய விஞ்ஞானமாணி, கணினி விஞ்ஞானம் பற்றிய விஞ்ஞானமாணி, சொத்துக்கள் முகாமைத்துவம் மற்றும்**

**மதிப்பீடு பற்றிய முதுவிஞ்ஞானமாணி, பல்பகுதிய விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் பற்றிய முதுவிஞ்ஞானமாணி, மீன்பிடி மற்றும் நீர்வள முகாமைத்துவம் பற்றிய முதுவிஞ்ஞானமாணி, வனவியல் மற்றும் சுற்றாடல் விஞ்ஞானம் பற்றிய முதுவிஞ்ஞானமாணி, வணிக பொருளாதார முதுவிஞ்ஞானமாணி, பிரயோக நிதியியல் விஞ்ஞான முதுமாணி, தொழில்சார் கணக்கியல் மீதான முதுமாணி, வியாபார முகாமைத்துவ முதுவிஞ்ஞானமாணி ஆகிய பட்டப்பின் படிப்புகளுக்கான ஏற்புடைய எல்லா பட்டதாரிகளும் மற்றும் எல்லாப் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா, பட்டப்பின் படிப்பு சான்றிதழ் பெருநோருக்கும்**

1. <u>பட்ட மேலங்கி மற்றும் நுழைவுச்சீட்டுகளை வழங்குதல்:</u>

**2022** பெப்ரவரி மாதம் **19 (**சனிக்கிழமை) மற்றும் **20 (**ஞாயிற்றுக்கிழமை) எனும் இரு திகதிகளிலும் முப்பகல் **09.**00 இல் இருந்து நடுப்பகல் **12 .00** வரை மற்றும் பிப்பகல் **04 .00** வரை  பட்டப்பின் படிப்பு கற்கைகள் பீடத்தில் பட்ட மேலங்கி, பட்ட சால்வை மற்றும் நுழைவுச்சீட்டு உங்களுக்கு வழங்கப்படும்

**பட்ட மேலங்கியை பெறுவதற்கு ரூபா 4000 /= மீள் செலுத்தப்படும் வைப்புப் பணத்தொகையை பெற்றுக்கொள்வதுடன், அக் கட்டணத்தை செலுத்தியதற்காக உறுதி செய்ததின் பின் (அச்சீட்டை எடுத்துக்கொண்டு வரவும்.) இவ் ஆவணத்துடன் மாணவர் அடையாள அட்டை (இதுவரை கையளிக்கப்படாவிடின்) மற்றும் மாணவர்கள் அறிக்கை புத்தகத்தை பீட அலுவலகத்தில் ஒப்படைப்பதின் மூலம் பட்ட மேலங்கியை பெற்றுக்கொள்ள முடியும்.**

ஏற்புடைய கட்டணங்களை செலுத்துவதற்காக பல்கலைக்கழக வலைப்பக்கத்தில் மாணவர்கள் கட்டணப் பிரிவினுள் சென்று அங்கு உள்ள உமக்கு உரித்தான வங்கிக் கணக்கு இலக்கத்தை பதிவிறக்கம் செய்து எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் பணத்தால் செலுத்த முடியும். மேலும் க்ரெடிட் கார்ட் மூலம் இணைய வழியாகவும் செலுத்த முடியும். அவ்வாறு செலுத்தி பதிவிறக்கம் செய்யப்படும் சீட்டை **2022** பெப்ரவரி மாதம் **15** ஆம் திகதிக்கு முன் தயார் படுத்திக்கொள்ளவும். நீங்கள் பட்ட மேலங்கியை பெற்றுக்கொள்ளும் பொழுது ஏற்படும் அசௌகரியங்களை

தவிர்ப்பதற்கு மேலே குறிப்பிட்டுள்ள தினத்திற்கு முன் செலுத்தவும்.

கீழே குறிப்பிட்டுள்ளவாறு பல்கலைக்கழக வலைப்பக்கத்தினுள் சென்று கட்டணங்களை செலுத்துவதற்காக தேவையான தகவல்களை பார்வையிட முடியும்.

**www.sjp.ac.lk – For Student- Student Payment- Internal Student- Enter Your NIC Number & Select Faculty – Select 'Refundable Cloak Fee'**

பட்ட மேலங்கியை பெரும் நேரத்தில் இக் கடிதத்துடன் அனுப்பப்பட்டிருக்கும் கீழே காணப்படும் விண்ணப்பம் **02** யும் பூர்த்தி செய்து உரித்தான பீட அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

**1.** பட்ட மேலங்கி கட்டணத்தை மீள் செலுத்தப்படுவதற்கான விண்ணப்பப் படிவம். (இணைப்பு **i)**
**2.** பட்டதாரிகளின் வேலைவாய்ப்பு பற்றிய கேள்வித்தாள். (இணைப்பு **ii)**

மேலும் எந்த ஒரு காரணத்தினாலும் பட்டமளிப்பு விழா நடைபெறும் நாட்களுக்குள் பட்ட மேலங்கியை வழங்கப்படாது. பட்ட மேலங்கி இல்லாமல் மதகுருமார் அல்லாத பட்டதாரி எவரும் பட்டமளிப்பு ஊர்வலத்தில் கலந்து கொள்ள முடியாது. **பட்டதாரி மதகுருமார்களுக்கு கை விசிறி அத்தினத்தில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பெற்றுக்கொள்ளமுடியும்.**

**2. <u>உடை:</u>**

பெண் பட்டதாரிகள் பிடித்த வர்ணங்களில் சாரி அல்லது ஒசரியும் ஆண் பட்டதாரிகள் தேசிய உடை அல்லது ஐரோப்பிய உடை(நீண்டகாற் சட்டையும் கோர்ட்டுடன் கழுத்துப்பட்டி) அடங்கிய ஆடை அணிய வேண்டும்.

**3. <u>வருகை:</u>**

பட்டமளிப்பு விழா துவங்குவதற்கு **ஒன்னரை மணித்தியாலங்களுக்கு முன்** பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வந்து ஊர்வலத்திற்காக தயாராக இருக்க வேண்டும்.

**4. <u>ஊர்வலத்தில் தயாராக இருத்தல்:</u>**

மதகுருமார் மற்றும் மதகுருமார் அல்லாத அனைத்து பட்டதாரிகளும் ஊர்வலத்தில் செல்ல வேண்டும் மதகுருமார் அல்லாத பட்டதாரிகள் மேலங்கியை அணிந்து ஊர்வலத்தில் தயாராக இருக்க வேண்டும் பட்டதாரிகளின் ஊர்வலத்தில் செல்ல வேண்டியது பட்டதாரிகளின் பெயர் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளவாராகும். அதனால் உங்களுக்குக் கிடைத்துள்ள இலக்கத்தின் படியே நீங்கள் தயாராக இருக்க வேண்டும். **பட்டச் சால்வையை அணிய வேண்டியது பட்டச் சான்றிதழ் பெறுவதற்காக மேடைக்கு பிரவேசிக்கும் பொழுதாகும். அதன் பின்பு பட்டமளிப்பு விழா முடிவடையும் வரை அதை அணிந்திருக்க வேண்டும்.**

**5. ஊர்வல இலக்கத்தை அணிந்திருத்தல்:**

பட்டச் சான்றிதழ் தவறின்றி உங்களுக்கு வழங்குவதற்கு ஊர்வல இலக்கம் ஒன்று பட்ட மேலங்கியில் ஒட்டப்படும். அவ் இலக்கம் பட்டச் சால்வையால் மூடிப்படாதவாறும் அது தொலையாத வாறும் கவனமாக இருக்க வேண்டும்.

**6. மண்டபத்தில் பட்டச் சான்றிதழ் வழங்குதல்:**

பட்டமளிப்பு விழா ஆரம்பித்ததன் பின் உங்களுடைய பெயரை சொல்லப் படும் அப்பொழுது வரிசையில் மேடைக்கு அழைத்து ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் வேந்தர் சங்கைக்குறிய தேரர் அல்லது உப வேந்தர் அவர்களால் உங்களுக்கு பட்டம் வழங்கப்படும்.

**7. பட்ட மேலங்கியுடன் பட்ட சால்வையை மீண்டும் ஒப்படைத்தல்:**

உங்கள் பட்ட மேலங்கியுடன் பட்ட சால்வையை உங்கள் பட்டமளிப்பு விழா இறுதியில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அமைக்கப்படும் விசேட கவுண்டரில் ஒப்படைக்க வேண்டும். அவ்வாறு ஒப்படைக்க இயலாமல் ஆனால் கீழ்க்காணும் திகதிகளில் மட்டும் உரித்தான பீட அலுவலகத்திற்கு வந்து பட்ட மேலங்கி மற்றும் பட்ட சால்வையை ஒப்படைக்க முடியும். குறிப்பிட்ட நாளுக்கு முன் பட்ட மேலங்கியை ஒப்படைக்க இயலாமல் ஆனால் தண்டப் பணம் அறவிட நேரிடும்.

**2022** மார்ச் மாதம் **05** ஆம் திகதி **(**சனிக்கிழமை**)**
**2022** மார்ச் மாதம் **06** ஆம் திகதி **(**ஞாயிற்றுக்கிழமை**)**

பட்ட மேலங்கி மட்டும் பட்ட சால்வையை ஒப்படைக்கும் பொழுது நீங்கள் கொடுத்த ரூபா **4000/=** வைப்பு பணத்தை உங்களுக்கு பணத்தால் செலுத்துவதற்கு அல்லது உங்கள் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் பட்ட மேலங்கி அல்லது பட்ட சால்வைக்கு ஏதேனும் தீங்கு ஏற்பட்டு இருந்தால் அல்லது அது தொலைந்து விட்டால் அதின் மொத்த பெருமதிக் கணக்கையும் நீங்கள் செலுத்த நேரிடும்.

**8. <u>நுழைவுச்சீட்டு:</u>**

பட்டதாரி ஒருவருக்கு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தினுல் வழங்கப்பட்டுள்ள நுழைவுச்சீட்டை ஒப்படைப்பதின் மூலம் மட்டுமே நுழைய முடியும். இதற்காக உங்களுக்கு ஓர் நுழைவுச்சீட்டும் விருந்தினர்களுக்கு இரு நுழைவுச் சீட்டுகளும் வழங்கப்படும். இன் நுழைவுச் சீட்டுகளை மேலங்கியை பெறுவதற்கு வரும் தருணத்தில் வழங்கப்படும். வாகனங்களில் வருவோருக்கு வாகன நுழைவுச்சீட்டு அதனுடன் வழங்கப்படும். **18** வயதிற்கு கீழ்ப்பட்ட எவரும் இன் நுழைவுச்சீட்டு மூலம் நுழைய அனுமதி வழங்கப்பட மாட்டாது.

**9. <u>பட்டமளிப்பு நிறைவு:</u>**

உங்களுக்கான அமர்வு நிறைவு பெற்றதுடனே அடுத்த அமர்வுக்காக பட்டதாரிகளின் ஊர்வலம் மட்டும் பேராசிரியர்களின் ஊர்வலத்தை ஒழுங்குபடுத்த வேண்டும். அதனால் பிரதான வளாகத்தினுள் மற்றும் ஊர்வலம் ஒன்று கூடும் இடத்தில் நடமாடுவதை விட்டும் தவிர்ந்து ஒத்துழைப்பை வழங்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

**10. <u>புகைப்படங்களை பெற்றுக்கொள்ளல்:</u>**

புகைப்படங்களை பெற்றுக் கொள்வது தொடர்பாக மேலதிக தகவல்களை பட்ட மேலங்கியை பெறும் நேரத்தில் உரிய நிறுவன முகவர்கள் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

**11.** இம்முறை பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறும் எல்லா பட்டதாரிகளின் பெயர்களும் உள்ளடங்கிய பட்டியல் ஒன்றை விஷேட பிரதி ஒன்றாக **2022. 02. 27** ஆம் திகதி **Sunday Observer** பத்திரிகை உடன் வெளியிடப்படும்.

இப்பொழுது நாட்டில் நிலவும் சீரற்ற சுகாதார நிலை காரணத்தினால் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் சுகாதார அறிவுறுத்தல்கள் படி பட்டமளிப்பு விழா நடைபெறும் அதே நேரம் அதை வெற்றிகரமாக நடாத்த மேலே குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் படி நடப்பதினால் உங்களால் பெறப்படும் ஒத்துழைப்பை மிகவும் உயர்வாகக் கருதுகிறேன்.

பீ. பியரத்ன
நிர்வாக ஒருங்கிணைப்பாளர்
கல்வி, மாணவர் விவகாரங்கள், வெளியீடுகள் மற்றும் தேர்வுகள் பிரிவு
பதிவாளருக்கு பதிலாக.

**கவனிக்க:**

- **தற்போது நாட்டில் அமுலில் உள்ள பாதுகாப்பான சுகாதார வழிகாட்டுதல்களை பின் பற்ற வேண்டிய அதே நேரம் விசேஷமாக ஒவ்வொரு நபருக்கு இடையிலும் ஒரு மீட்டர் தூரத்தை வைத்துக்கொள்வதும் உரிய முறையில் முகக் கவசங்களை அணிந்து இருப்பதும் கட்டாயமாகும்.**

- **மண்டபத்தினுள் நுழையும் பொழுது Covid-19 தடுப்பூசி இரண்டையும் பெற்றிருத்தல் மற்றும் ஊக்கமருந்து அளவு (Booster Dose) பெற்றுக் கொண்டதற்கான அட்டையை அல்லது மூன்று நாட்களுக்குள் எடுத்துக்கொள்ளப்பட்ட ரேபிட் ஆன்டிஜென் டெஸ்ட் அறிக்கை ஒன்றை (Rapid Antigen Test) சமர்ப்பிக்க வேண்டும்.**

- **நீங்கள் மற்றும் உங்களுடன் வரும் விருந்தினர்கள் கேமரா மற்றும் கையடக்கத்தொலைபேசி ஆகியவற்றை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் எடுத்து வருவது பாதுகாப்பு காரணங்களுக்காக தடைசெய்யப்பட்டுள்ளது. அதனால் அவற்றை கொண்டு வருவதில் இருந்தும் தவிர்ந்து கொள்ளுங்கள்.**

- மேலே குறிப்பிட்டுள்ள அறிவுறுத்தல்கள் படி  செயல்படாத எவரையும் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நுழைய அனுமதி வழங்கப்பட மாட்டாது.